தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-6-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய சுற்றுச்சூழல் மாசுபற்றிய விழிப்புணர்வு முகாம்**

மருதமலை கோவில் வளாகம் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறியியல் மாணவர்களால் 22-6-2014 காலை சுத்தம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வு ஆகஸ்டு மாதம் நடத்தப்பட இருக்கும் Ecofest'14 எனும் தேசிய அளவிலான தொழில்நுட்பக் கருத்தரங்கின் முன்னோடி ஆகும். 'வாழ்வாதாரத்தைப் பற்றி ஒரு புதிய கண்ணோட்டம்' என்ற கருத்தை அறிவுறுத்தும் விதம் இந்நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வு பி.டெக். ஆற்றல் மற்றும் சுற்றுப்புறச் சூழல் பொறியியல் மற்றும் பி.டெக் உணவு பதப்படுத்துதல் பொறியியல் படிக்கும் 300க்கும் மேற்பட்ட மாணவர்களின் ஊக்கமான ஈடுபாட்டால் செவ்வனே நடத்தப்பட்டது. இவர்கள் மட்டுமல்லாது முதன்மையர் (வேளாண் பொறியியல்) முனைவர் திவாகர் துரைராஜ் மற்றும் பேராசிரியர்களும் பங்கேற்று மாணவர்களை வழி நடத்தி ஊக்குவித்தனர்.

பொதுமக்களிடையே குப்பை மற்றும் கழிவுப் பொருட்களை சரியான முறையில் அகற்றுவது பற்றியும், அதற்கான திட்டங்கள் பற்றியும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதம் இந்நிகழ்வு அமைந்தது.

மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் குப்பைகளை சேகரித்து, துப்புரவு பணியில் ஈடுபட்டனர். குப்பைகள் சேகரிக்கப்பட்டு மக்கும் பைகளில் சேர்த்து நகராட்சி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மக்களிடம், எதிர்காலத்தில் கவனக் குறைவோடு மக்காத குப்பைகளை பொது இடங்களில் வீசி, சுற்றுச்சூழலை மாசுப்படுத்த வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டனர்.

பொதுமக்களுக்கு தொந்தரவில்லாத வகையில் உற்சாகத்தோடு வேலை செய்த மாணவர்களை மருதமலை அறநிலையத்துறையினரும் பொதுமக்களும் பெரிதும் பாராட்டினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்





